Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 மாசி 24 வெள்ளிக்கிழமை (07-03-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 100

# திருமலையிலும் மட்டக்களப்பிலும் புலிகள் ஒரேவேளையில் அதிரடி!

## சீனகுடாவில் விமானம் சேதம்

கொழும்பு, மார்ச் 7

திருகோணமலை சீனக்குடாவில் உள்ள விமானப் படையினரின் தளம் மீது புதன்கிழமை இரவு விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் விமானத் தளத்தில் நிறுத்தப்பட்டிருந்த வை-12 ரக இராணுவப் போக்குவரத்து விமானம் ஒன்று பெரும் சேதமடைந்தது. அதற்கு உதவிக்கு வந்த ஹெலிக்கொப்ரர் ஒன்றும் சேதமடைந்தது.

புதன்கிழமை இரவு 11.30 மணிக்குத் தொடங்கிய புலிகளின் தாக்குதல் மூன்று மணி நேரம் நீடித்தது.

மோட்டர் மற்றும் சிறு ஆயுதங்கள் மூலம் புலிகள் பல குழுக்களாகப் பிரிந்து இத்தாக்குதலை நடத்தியதாகவும்—

இத்தாக்குதல்களில் புலிகள் தரப்பில் நான்கு தற்கொலைப் படையினர் மரணமடைந்தனர் என்றும் — ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

சீனக்குடா விமானத்தளம் மீது புலிகளினால் நடத்தப்பட்ட தாக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுணதீவில் முகாம் நாசம்

கொழும்பு, மார்ச் 7

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வவுணதீவு இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை 1. 45 மணி அளவில் நடத்திய தாக்குதலின் போது அந்த இராணுவமுகாம் முற்றாக அழிக்கப்பட்டது.

இந்த மோதல் 6 மணிநேரம் நீடித்ததாகவும் மோதலின் பின்னர் படையினர் தேடுதல் நடத்திய போது 48 படையினரின் சடலங்கள் மீட்கப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்றுத் தெரிவித்தது.

புலிகள் தரப்பில் 160 பேர் வரை இறந்ததாகவும் அது அறிவித்தது. எனினும் படையினர் தரப்பில் இழப்பு அதிகம் என்று ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

முகாம் தாக்கப்பட்ட சமயம் அந்த முகாமில் 300 படையினர் வரை இருந்தனர் என்றும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் சம்பவத்தை அடுத்து படையினரால்போக்குவரத்து தடை

திருகோணமலை, மார்ச் 7

சீனக்குடா விமானத் தள தாக்குதல் சம்பவத்தை அடுத்து திருகோணமலை — கண்டி வீதியில் 4 ஆம் கட்டைப் பகுதியிலிருந்து ஆரம்பமாகும் — சீனக்குடாவுக்குச் செல்வதற்கான — கிண்ணியா வீதியூடான போக்குவரத்து நேற்றுக் காலை முதல் தடைப்பட்டிருந்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமானம் முற்றாக அழிப்பு என புலிகள் தரப்பில் அறிவிப்பு

வவுனியா, மார்ச் 7

சீனக்குடாவில் உள்ள இராணுவ விமானத் தளம் மீது புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் சீனத் தயாரிப்பு வை-12 ரக ராணுவ போக்குவரத்து விமானம் முற்றாக அழிக்கப்பட்டதாகப் 'புலிகளின் குரல்' வானொலி நேற்றுத் தெரிவித்தது.

(இ-4)

## ஐ. தே. க பிரமுகர் வீட்டுக்கு அருகில் குண்டு வெடிப்பு

கொழும்பு, மார்ச் 7

ஐக்கிய தேசியக் கட்சி பொதுச் செயலாளரான காமினி அத்துக்கோறளையின் தனிப்பட்ட செயலாளரான அசோக அமரசிங்கவின் கஹவத்த வீட்டுக்கு அருகில் குண்டு ஒன்று வெடித்தது.

தம்மை அச்சுறுத்தும் நோக்குடன் இக்குண்டு வெடிக்க வைக்கப்பட்டதாக அசோக அமரசிங்க கஹவத்த பொலீஸில் செய்த முறைப்பாட்டில் குறிப்பிட்டிருக்கின்றார்.

(உ-150)

## 12 மணி நேரத்துக்குப் பின்பே மீட்புப் படை வந்து சேர்ந்தது

கொழும்பு, மார்ச் 7

வவுணதீவு இராணுவ முகாம் மீதான தாக்குதல் ஆரம்பித்து 12 மணி நேரத்துக்குப் பின்னரே மீட்புப் படையினர் அந்த முகாமைச் சென்றடைந்தனர் என்று இராணுவ அதிகாரி ஒருவர் ரோய்ட்டர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இறந்த படையினரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது என்றும் அவர் கூறினார் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று தெரிவித்தது.

இதற்கிடையில் வவுணதீவுத் தாக்குதலில் 160 புலிகள் இறந்ததாக அரசு வெளியிட்ட அறிவிப்பை லண்டனில் உள்ள புலிகளின் அறிவிப்பாளர் அன்ரன் ராஜா மறுத்துள்ளார்.

புலிகளின் இழப்பு எண்ணிக்கையை அரசு மிகைப்படுத்திக் கூறுவதுதான் வழக்கம் என்று கூறிய அன்ரன்ராஜா இத்தாக்குதல்கள் பற்றிய சரியான தகவல்கள் தங்களை வந்தடையவில்லை என்று கூறினார்.

(இ-4)

## மட்டக்களப்பில் மற்றொரு பகுதியிலும் நேற்று தாக்குதல்

### ஒரு பொலீஸார் பலி! 8 பேர் காயம்!!

மட்டக்களப்பு மாவட்டம் வவுணதீவு இராணுவ முகாம் புலிகளால் நேற்று அதிகாலை தாக்கப்பட்ட சமயம் மட்டக்களப்பில் உள்ள 3 ஆவது படைப் பிரிவின் தலைமை அலுவலகத்தைப் புலிகளின் மற்றொரு அணி தாக்கியது.

வவுணதீவுக்கு மேலதிக படையினர் அனுப்பப்படுவதைத் தடை செய்யவே புலிகள் மட்டக்களப்பிலும் தாக்குதலை நடத்தியதாகத் தெரிய வருகிறது.

3 ஆவது படைப் பிரிவின் தலைமை அலுவலகத்தின் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் ஒரு பொலீஸ் உத்தியோகத்தர் உயிரிழந்தார். 8 பொலீஸார் காயமடைந்தனர்.

இந்தச்சம்பவத்தை அடுத்து விமானப்படையின் விமானங்கள் இப்பகுதியில் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன என்று இலங்கை வானொலி தெரிவித்தது.

## 10 பேர் கொண்ட குழுக்களாக புலிகள்

கொழும்பு மார்ச் 7

யாழ். குடாநாட்டில்இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் செயற்படும் அரசியல் கட்சிகள் மற்றும் தனிப்பட்டவர்களைக் கண்காணிப்பதற்கும் —

ஊழலில் ஈடுபடும் அரச அதிகாரிகளுக்கு தண்டனை வழங்கவும்—விடுதலைப் புலிகள் 10 பேர்களைக் கொண்ட குழுக்களாக யாழ். குடாநாட்டுக்குள் ஊடுருவியுள்ளனர்— என ''யுக்திய'' சிங்களவார இதழ் தெரிவிக்கிறது.

பத்துப் பேர் கொண்ட ஒவ்வொரு குழுவிலும் புலன் ஆய்வுப் பணியில் ஈடுபடும் இருவரும் கரும்புலிகள் மூவரும் துப்பாக்கிதாரிகள் ஐவரும் அடங்கியுள்ளனர் என அப்பத்திரிகை மேலும் தெரிவித்தது.

(இ-10)

## மத்தியஸ்தம்குறித்துபிரபாவுடன்பேச திலகர் பாரிஸிலிருந்து வன்னிக்கு?

கொழும்பு, மார்ச். 7

மேற்கு நாடு ஒன்றின் முக்கிய இரகசியச் செய்தி ஒன்றுடன் விடுதலைப் புலிகளின் பாரிஸ் நாட்டுப் பிரதிநிதி லோறன்ஸ் திலகர் வன்னி சென்றிருக்கின்றார்.

கொழும்பு செய்திவட்டாரங்கள் இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றன.

புலிகளின் சர்வதேசப் பிரதிநிதி தற்போது வன்னிக்குச் சென்றிருப்பதாக சில தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இலங்கை விவகாரத்தில் சர்வதேச மத்தியஸ்தம்

(7ஆம் பக்கம் பார்க்க)

## பிணையில் செல்ல அனுமதி

சென்னை, மார்ச் 7

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு கடந்த மாதம் கைது செய்யப்பட்ட நான்கு பேரில் ஒருவரான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மறவன் புலோ சச்சிதானந்தம் நேற்றுப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சென்னையில் பிரபல புத்தக வெளியீட்டாளராக விளங்கும் சச்சிதானந்தன் சென்னை உயர்நீதிமன்ற (ஹைகோர்ட்) நீதியரசர் வி. ரங்கசாமி முன்னிலையில் நேற்று ஆஜர் செய்யப்பட்டார்.

அவரைப் பிணையில் விடுமாறு அவரது தரப்பு வழக்கறிஞர் சமர்ப்பித்த விண்ணப்பத்தை நீதியரசர் ஏற்றுக் கொண்டார்.

விடுதலைப் புலிகளுக்குத் தேவையான மருந்து வகைகளையும் பிற பொருள்களை வாங்குவது குறித்து திட்டமிட்டதாகக் கூறி சச்சிதானந்

( 8ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நடராசா நல்லம்மா

புத்தூர்கிழக்கைச் சேர்ந்த திருமதி நடராசா நல்லம்மா (1997-03-06) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் நடராசாவின் அன்பு மனைவியும், நாகநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தயாநாதன். மற்றும் குறோஜினிதேவி (கனடா), சுகுணா, கமலநாதன் (கனடா), செந்தில்நாதன் (கனடா), ரவீந்திரன் (பாங்கொக்), றஞ்சினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சாந்தினி (பிரான்ஸ்), பற்குணசிங்கம் (கனடா), மோகனா (கனடா), பத்மல்ல (கனடா), ஆகியோரின் அன்புமாமியாரும், தயான், சோபா, மயூரி, தர்சன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், சிவபாக்கியத்தின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 06-03-1997 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஐ. நடராசா
(கணவன்)

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.
(45675)

## திருமதி கருணாகரன் ஞானசக்தி

பொன்னாலையைச் சேர்ந்த திருமதி கருணாகரன் ஞானசக்தி 28-02-97 இல் ஒலுமடுவில் அகால மரணமானார்.

இவர் காலஞ்சென்ற மா. கருணாகரனின் (நடத்துநர், இ.போ.ச.) அன்பு மனைவியும், கிரிதரன் (பல்கலைக்கழகம், பிரான்ஸ்), சிறிதரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற வாமதேவா தம்பதியரின்(பொன்னாலை) சிரேஷ்ட புத்திரியும், யோகாசக்தி (கனடா), கிருபாசக்தி (ஆசிரியை, பொன்னாலை வரதராஜப் பெருமாள் வித்தியாசாலை), தனசக்தி (கனடா), பராசக்தி (பிரான்ஸ்), அருள்சக்தி (கனடா), ராமகிருஷ்ணன் (ஜேர்மனி), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஞானக்கணேஷ் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28 - 02 - 97 இல் ஒலுமடுவில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கிருபாசக்தி சிவராஜா
(சகோதரி)

மூணாமலை வீதி,
மானிப்பாய்.
(45669)

## சேனாதிராசா இராமநாதன்

(நயினாதீவு)

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், இல: 40, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட சேனாதிராசா இராமநாதன் (மாமா) (மனேஜர் K. R. N. என்ரபிறைசெஸ், 5 ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு - 11, முன்னாள் நிர்வாகி வீடியோ பிரசாத், யாழ்ப்பாணம்) 5 - 3 - 97 இரவு யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நயினாதீவு சேனாதிராசா — மாணிக்கம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதி, துரையப்பா — சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், சந்திரலீலாவின் அன்புக் கணவரும், யாழ். இந்துக் கல்லூரி மாணவர்களான பிரசன்னா, பிரகாஷ், பிரவினின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், பூமகள் (ஓய்வுபெற்ற ஆசிரியை— கொழும்பு), தங்கம் (நயினாதீவு), இலெட்சுமி (ஓய்வு பெற்ற ஆசிரியை — இந்தியா), Dr. மீனாட்சி (மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பளை—மானிப்பாய்), நாகம்மா (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்),சொர்ணம்(ஆசிரியை,கொக்குவில் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற பொன்னம்பலம் (சிலாபம்), ஜானகி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மநாதன் (C. T. B. திருகோணமலை), காலஞ்சென்ற அன்னபூரணம், ஏரம்பமூர்த்தி (முழங்காவில்), தர்மராஜா (வர்த்தகர் கொழும்பு) ஆகியோரினதும் பரமேஸ்வரி (கனடா), K. R. நடராசா (வர்த்தகர் K. R. N. என்ரபிறைசஸ், கொழும்பு), காலஞ்சென்ற சிவபாதம், தியாகராசா (வர்த்தகர், இந்தியா), Dr. சின்னத்தம்பி (மாவட்ட வைத்தியசாலை, சாவகச்சேரி), சந்திரன் (நிர்வாக அலுவலர், பிரதேச செயலகம், வேலணை), மகேஸ்வரநாதன் (மின்முகாரி, சிமெந்துத் தொழிற்சாலை, K. K. S), செல்வராணி (சிலாபம்), சுந்தரலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சனிக்கிழமை (8 – 3 - 97) அன்று காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. சந்திரலீலா (மனைவி)
Dr. N. சின்னத்தம்பி (மைத்துனர்)
K. K, சந்திரன் (மைத்துனர்)
V. மகேஸ்வரநாதன் (மைத்துனர்)

இல:40,சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்
(45680)

## மீண்டும் திறப்பு

உரும்பிராய் வடக்கில் உள்ள நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தின் 25 ஆம் இலக்கக் கிளை மீண்டும் பழைய இடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. (ஐ-154)

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து, பல்கலைக்கழக மருத்துவ அதிகாரி பதவிக்கான விண்ணப்பங்கள் 1997-04-11 ஆம் திகதிவரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**சம்பள அளவுத்திட்டம்:**
ரூபா 7300 — 10x250, 10x325 — 13,050/- மாதமொன்றிற்கு

**தகைமைகள்:**
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் மருத்துவப் பட்டத்துடன் குறைந்தது 3 வருட மருத்துவத் தொழில்சார் அனுபவம்.

**வயது:**
45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

**தெரிவு:**
நேர்முகப் பரீட்சை மூலம்.

· ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் நவீன சந்தைக் கிளையில் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிறாப்பரின் கருமபீடத்தில் 20 ரூபாவைச் செலுத்தி இப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் / தாபனங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையுடன் 23x 10 ச.மீ அளவுடைய சுயமுகவரியிடப்பட்டதும் ரூபா 2. 50 பெறுமதியான முத்திரையொட்டப்பட்டதுமான கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றில் உள்ளோர் தமது விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனத் தலைவர்களூடாக அனுப்புதல் வேண்டும். அரச சேவையிலுள்ளவர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.

விண்ணப்ப முடிவுத் தேதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும், தெளிவற்ற விவரங்கள் தரப்பட்டுள்ள விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1997 - 03 - 04.
(சி/252)

# அரசியல் வன்முறைகளுக்கு முடிவு காணப்படவேண்டும்

## 13 கட்சிகள் கூட்டறிக்கை

கொழும்பு, மார்ச் 7

''நாட்டில் அரசியல் வன்முறைக் கலாசாரத்தை கூட்டாக ஒழித்துக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்''

இப்படி நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கேட்டுள்ளார்கள்.

13 கட்சிகளின் தலைவர்கள் நேற்று விடுத்த கூட்டறிக்கையில் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

சபாநாயகர் நேற்றுக் காலை நாடாளுமன்றில் இந்த அறிக்கையை வாசித்தார்,

உள்ளூராட்சித் தேர்தல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பை ஒவ்வொரு வேட்பாளரும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-4)

## வகுப்புகள் தொடர்ந்து நடக்கின்றன

''போரூட்'' நிறுவனத்தின் யாழ். கிழக்கு கிளையின் அனுசரணையுடன் இயங்கி வந்த வடமராட்சி நல்லொழுக்க நிறுவனத்தில் (வி.ஓ.ஜி.ரி.) வெளிவாரிப் பட்டப்படிப்பு வகுப்புகள் இப்போது தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

தம்பசிட்டியில் உள்ள 'போரூட்' அலுவலகத்தின் முன்னால் அமைந்த இடத்தில் இவ்வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. சுமார் 90 மாணவர்கள் வகுப்புகளுக்குச்சமுகமளிக்கின்றனர்.

ஏற்கனவே இங்கு பயின்ற மாணவர்களில் மிகுதியானோர் பிறிதொரு இடத்தில் கல்வி பயில்வது தெரிந்ததே.

(அ-173)

உ

## யா/வைத்தீஸ்வராக் கல்லூரி வாழ்த்துகின்றோம்

1996 க. பொ. த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

பரீட்சைக்குத் தோற்றியோர் 35 பேர்
பல்கலைக்கழக அனுமக்குத்தகுதி பெற்றோர் 25 பேர்

| வர்த்தகம்: | ஏ | பி | சி | எஸ் |
|---|---|---|---|---|
| 1. யோ. ஹேமா | 2 | 1 | 1 | - |
| 2. சி. பரதன் | 2 | - | 2 | - |
| 3. அ. ஜெயராஜ் | 1 | 2 | 1 | - |
| 4. இ.சிவரஞ்சன் | - | 3 | 1 | - |
| 5. ச. சசிதரன் | - | 1 | 2 | 1 |
| **கலை:** | | | | |
| 1. ச. சுபாஜினி | 1 | 2 | 1 | - |
| 2. அ. ஜெலாஜினி | 1 | 1 | 1 | 1 |
| 3. கு. தமிழ்ச்செல்வன் | 1 | 1 | 1 | 1 |
| 4. இ. கிருஷ்ணகுமார் | 1 | 1 | 2 | - |
| 5. ப. காண்டீபன் | - | 3 | 1 | - |
| 6. ம. பத்மராஜ் | 1 | 2 | 1 | - |
| 7. க. நளாஜினி | - | 3 | 1 | – |
| 8. சி. சாந்தகுமார் | – | 1 | 3 | - |
| 9. ந. மதனரூபா | - | 1 | 3 | - |
| 10. ம. சுபாஜினி | - | 1 | 2 | 1 |
| 11. வீ. திரிபுரசுந்தரி | – | 2 | 1 | 1 |

பல இன்னல்களுக்கு மத்தியிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும், தகுதிபெற்ற ஏனைய ஒன்பது மாணவர்களையும், ஊக்கமளித்த ஆசிரியப் பெருந்தகைகளையும் பெற்றோரையும்

**வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.**

பழைய மாணவ மன்றம்

1997-03-06
(45679)

## 2 ஆம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம்: 19 — 06 — 1951

மறைவு: 27 — 02 — 1995

### திருமதி இராஜேஸ்வரி வாமதேவா

(தங்கம்)

**திதி: 07-03-1997**

ஆண்டிரண்டு சென்றாலும் ஆறவில்லை எம் இதயம்
ஈண்டுஉமது நினைவுதான் எமைவாட்டி வதைக்குதே!

பிரிவால் துயருறும்:
அன்புக் கணவன்,
பிள்ளைகள்: சுரேஜினி, ஷர்மினி, நிசாந்தினி.

கற்பகப் பிள்ளையார் கோயிலடி,
கச்சேரி - நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.
(45681)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 அல்பேனிய நகரங்கள் கிளர்ச்சியாளரின் பிடியில்!

## சமரச முயற்சியில் ஐரோப்பிய கவுன்சில்

ரிறோன், மார்ச் 7

அல்பேனியாவில் வன்முறைகள் அதிகரித்துவரும் இவ்வேளையில் அரசாங்கம் நாட்டின் தெற்குப் பகுதியிலுள்ள மூன்று நகரங்களின் கட்டுப்பாட்டை கிளர்ச்சியாளர்களிடம் இழந்துள்ளது.

ஐரோப்பியக் கவுன்சிலைச் சேர்ந்த குழு ஒன்று அல்பேனியாவின் தலைநகரான ரிறோன் சென்றுள்ளது. அந்நாட்டில் அதிகரித்துவரும் வன் முறைகளுக்கு முடிவுகாண முயற்சிப்பதே இந்தக் குழுவின் நோக்கமாகும்.

அல்பேனிய அதிபர் பொறீஷியா பிரகடனப் படுத்தியுள்ள அவசரகாலச் சட்டத்தால் அந்நாட்டின் வடபகுதி ஓரளவு கட்டுப்பாட்டில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் அங்கு நிலவும் அமைதியை சமாதானத்துடன் கூடிய அமைதி எனக் கூற முடியாது எனச் செய்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் நாட்டின் தென்பகுதியில் அரசின் பிடி தளர்ந்து வருவதாகவும், கிளர்ச்சியாளர்களின் கை ஓங்கிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தென்பகுதி நகரங்களின் கட்டுப்பாட்டை அரசு படிப்படியாக இழந்து வருகிறது.

புதிய முதலீடுகளை நாட்டுக்குள் அனுமதிப்பதை எதிர்த்து அல்பேனியாவில் கலவரங்கள் அரம்பமானதை அடுத்து கடந்த நான்கு நாள்களாக அங்கு அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது.

(ஐ-10)

# தாடியை மழித்தால் கசையடி கிடைக்கும்!

## தலிபானின் புதிய எச்சரிக்கை

காபூல், மார்ச் 7

தாடியை வளரவிடாமல் தடுக்கின்ற — மழிக்கின்ற — ஆண்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆப்கானிஸ்தானின் 'தலிபான்' அமைப்பு எச்சரித்திருக்கிறது.

தாடியை மழிக்கின்ற ஆண்களுக்குக் குறைந்தது இரண்டு கசையடிகள் அல்லது ஒரு நாள் சிறைத் தண்டனை வழங்கப்படும் என்று 'நல்லொழுக்கத்தை வளர்த்து தீய பழக்கத்தை அடக்கும்' தலிபான் அமைப்பின் விசேட பிரிவு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தாடியை மழித்துக் கொள்வோரைத் தேடிப் பிடிப்பதற்காக ஏற்கனவே தலிபான் போராளிகள் தெருக்களில் இறங்கித் தேடுதலை ஆரம்பித்திருக்கிறார்கள்.

முஸ்லிம் ஆண்கள் அனைவரும் தாடி வளர்க்க வேண்டும்; அது ஒரு இஸ்லாமியக் கடமை என்று கூறும் தலிபான் அமைப்பு ஆப்கானிஸ்தானில் மூன்றில் இரண்டு பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது.

தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் கடுமையான இஸ்லாமியச் சட்டங்களைத் தலிபான் அமைப்பு நடைமுறைப்படுத்தி வருகிறது.

(ஐ)

# இந்திய மீனவர்கள் புதுடில்லியில் போர்க் கொடி!

இந்திய அரசின் மீன்பிடிக் கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காக இந்தியாவின் சகல பகுதிகளிலும் இருந்து வந்த ஆயிரக் கணக்கிலான மீனவர்கள் புதுடில்லியில் கூடியுள்ளனர்.

சர்வதேச மீன்பிடி வள்ளங்களுக்கு இந்தியக் கடற் பகுதியில் மீன்பிடிக்க உரிமம் வழங்கப்பட்டிருப்பதை இவர்கள் நீண்ட காலமாக எதிர்த்து வந்தனர்.

தமது எதிர்ப்பை நேரடியாகத் தெரிவிக்கவே மீனவர்கள் தற்போது டில்லியில் திரண்டுள்ளனர்.

இந்தப் பிரச்சினையை ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு சர்வதேச மீன்பிடி றோளர்களது உரிமத்தை ரத்துச் செய்யுமாறு அரசுக்கு பரிந்துரை செய்திருந்தது என்றும் —

ஆனால் அரசு இது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மீனவர் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# இந்து மா சமுத்திர வர்த்தகக் கூட்டமைப்பு

போட்லூயிஸ், மார்ச் 7

இந்து மா சமுத்திரத்தில் உள்ள 14 நாடுகளின் பிரதிநிதிகள் மொறீஷியஸ்தீவில் கூடியுள்ளனர்.

''வட்டார ஒற்றுமைக்கான இந்து சமுத்திர விளிம்பு கூட்டமைப்பு'' என்னும் புதிய அமைப்பை உருவாக்கும் தொடக்க நிகழ்வில் அவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

# புலிகள் வசம் சிக்கிய ஆட்லறிகள் கிழக்கு படையினருக்கு அச்சுறுத்தல்

விடுதலைப் புலிகளிடம் சிக்கியுள்ள ''ஆட்லறி'' பீரங்கிகளால் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பாதிப்புகள் ஏற்படும் என்று 'லக்பிம' சிங்கள வார இதழில் அண்மையில் வெளியான கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்ட இக்கூற்றை இராணுவத் தளபதி பின்னர் நிராகரித்திருந்தார். சர்ச்சைக்குரிய அக்கட்டுரை இங்கே பிரசுரமாகிறது.

வவுனியா — மன்னார் நெடுஞ்சாலையை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவிப்பதற்கான 'எடிபல' இராணுவ நடவடிக்கையின் 2ஆம் கட்டம் கடந்த மாதம் 17ஆம் திகதி ஆரம்பமானது.

வவுனியா — மன்னார் நெடுஞ்சாலையில் வவுனியாவிலிருந்து 9 மைல் தூரத்தில் அமைந்துள்ள பூவரசங்குளத்தை கடந்த 4ஆம் திகதி கைப்பற்றிய 'எடிபல' படையணி மீண்டும் முன்னேறி அங்கிருந்து 13 மைல் தூரத்தில் அமைந்துள்ள பறையனாளங்குளத்தைக் கைப்பற்றியது.

அதுவரை இராணுவம் முன்னேறியபோது விடுதலைப் புலிகள் இராணுவத்திற்கு எதிராகத் தாக்குதல்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை. பறையனாளங்குளத்தைக் கைப்பற்றிய 'எடிபல' படை அணி அங்கு தமது நிலைகளைப் பலப்படுத்தி முகாம் அமைக்கும் பணியில் சில நாள்கள் ஈடுபட்டது.

'எடிபல' 2 ஆம் கட்ட நடவடிக்கையை பறையனாளங்குளத்திலிருந்து ஆரம்பித்த படையணி 18ஆம் திகதி முருங்கனை அண்மித்தது.

முருங்கன் பகுதியில் விடுதலைப் புலிகள் 'எடிபல' படையணி மீது பாரிய தாக்குதல்களை மேற்கொள்வர் என இராணுவம் நம்பியது.

இருப்பினும் 'எடிபல' படையணி மீது தாக்குதல்கள் எதையும் மேற்கொள்ளாது வவுனியா — மன்னார் நெடுஞ்சாலையை கைப்பற்ற அனுமதித்து — பின்னர் படையினர் மீது அடிக்கடி தாக்குதலை மேற்கொள்ளுவதே புலிகளின் திட்டம் என சில இராணுவ ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் வவுனியா — மன்னார் நெடுஞ்சாலையை இழப்பதால் விடுதலைப் புலிகளுக்கு பெரிய பாதிப்பு ஏற்படாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா — மன்னார் நெடுஞ்சாலையை விட வவுனியா — கிளிநொச்சி நெடுஞ்சாலையே விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் முக்கியமானது என்பதால் அதைப் பாதுகாப்பதே விடுதலைப் புலிகளின் முக்கிய குறிக்கோளாகும்.

வவுனியா — கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்ற இராணுவம் முயற்சிக்குமாயின் அதி உச்ச ஆற்றலைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் அந்த நெடுஞ்சாலையைக் காத்துக் கொள்வர் என விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் மீண்டும் மீண்டும் தெரிவித்து வருகின்றனர்.

வவுனியாவில் இருந்து இராணுவம் கிளிநொச்சியை நோக்கி முன்னெடுத்து மன்னார் நோக்கிச் சென்றது விடுதலைப் புலிகளுக்கு திருப்தியையே ஏற்படுத்தும். காரணம் இராணுவம் வவுனியா— மன்னார் நெடுஞ்சாலையைக் கைப்பற்றி அதைத் தக்க வைப்பதற்காக ஆயிரக்கணக்கான படை வீரர்களை ஈடுபடுத்தியுள்ளதால் வவுனியா — கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவதற்காக உடனடியாக மற்றொரு இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படமாட்டாது என்பது தெளிவு.

அவ்வாறெனில் வவுனியா — மன்னார் நெடுஞ்சாலையைக் கைப்பற்றும் இராணுவத்தின் முயற்சிகளுக்குத் தடையாக இராது. தங்களுக்கு அவ்வளவு முக்கியமற்ற வவுனியா—மன்னார் நெடுஞ்சாலையில் ஆயிரக்கணக்கான படையினரை பணியில் ஈடுபட வைப்பதைத் தவிர வேறு பொருத்தமான நடவடிக்கைகள் எவையும் இல்லை என்பதை விடுதலைப் புலிகள் அறிவார்கள்.

### சமாதான யாத்திரை

மன்னாரை நோக்கி முன்னேறிய 'எடிபல' படையணிக்கு விடுதலைப் புலிகளின் எதிர்ப்புகள் எவற்றையும் சந்திக்க நேராததால் இராணுவத்தின் முன்னேற்றமானது சமாதானப் பாத யாத்திரை போல் அமைந்தது.

இதை தேர்தல் நோக்கங் கொண்ட இராணுவ நடவடிக்கை என சில விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

தேவையான ஒன்றைச் செய்யாது தேவையற்ற ஒன்றை மேற்கொண்டு எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தல் பிரசார மேடைகளில் ''நாங்கள் யாழ்ப்பாணத்தைப் பிடித்தோம், நாங்கள் கிளிநொச்சியைப் பிடித்தோம், மன்னாருக்கான தரைவழிப்பாதையைத் திறந்தோம்'' என அரசு ஓலமிட்டு வாக்குகளைப் பெறும் முயற்சியில் இறங்கலாம் என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

[illegible] களில் முல்லைத்தீவு, பூநகரி, புளுக்குனாவ இழப்புக்கள் பற்றியோ அல்லது பரந்தனில் ஏற்பட்ட துன்பியல் நிகழ்வுகள் பற்றியோ அரசு எடுத்துக்கூறும் என்பது சந்தேகமே என ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

மக்களை வெற்றிப் பெருமிதமடையச் செய்து தேர்தலில் வெற்றி பெறுவதே அரசின் நோக்கம் என்பதில் சந்தேகமில்லை.

துவைக்கத் துவைக்க மீண்டும் மீண்டும் சேற்றில் விழும் துணியைப் போன்ற இந்தத் துர்ப்பாக்கியமான யுத்தமானது அரசிற்கும் குறித்த சில இராணுவ அதிகாரிகளுக்கும் லாபம் தரும் ஒன்றாகிவிட்டதை யுத்தத்தை நடத்தும் விதம் தெளிவாக்குகிறது.

வடக்கில் 'எடிபல' இராணுவ நடவடிக்கை மேற்கொளளப்பட்ட வேளையில் கிழக்கில் ஆயுதப் படைகள் மீது விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதல்களை மேற்கொள்ளத் தயாராகி வருகிறார்கள் என பாதுகாப்பு வட்டாரங்களுக்கு தகவல்கள் கிடைத்தன. அந்தத் தாக்குதல்களுக்காக புளுக்குனாவையில் இருந்து கைப்பற்றிய பீரங்கியை விடுதலைப் புலிகள் பயன்படுத்தலாம் என்ற ஐயம் பாதுகாப்புப் படையினர் மத்தியில் நிலவியது. அவர்களது ஐயத்திற்கும் காரணம் இருந்தது.

### கைவிடப்பட்ட எறிகணைகள்

கடந்தமாதம் 18ஆம் திகதி மீயன்குளத்தில் படையினர் விடுதலைப் புலிகள் மீது மேற்கொண்ட கெரிலாத் தாக்குதலின்போது தப்பி ஓடிய புலி உறுப்பினர்கள் 120மி.மீ பீரங்கிக்குப் பயன் படுத்தும் 25 எறிகணைகளை கைவிட்டுச் சென்றுள்ளனர்.

வாகரையிலிருந்து தொப்பிகலவிலுள்ள போறாட் என்ற விடுதலைப் புலிகளின் முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதாகக் கருதப்படும் பீரங்கிக்கான இந்த 25 எறிகணைகள் இராணுவத்தினர் மீது பாரிய தாக்குதல்ஒன்றை நடத்துவதற்காக எடுத்துச் செல்லப்பட்டவை என இராணுவம் நம்புகிறது.

விடுதலைப் புலிகள் வசம் மூன்று பீரங்கிகள் இருப்பது தற்போது பாதுகாப்புத் துறையினர் எதிர் நோக்கும் பாரிய அச்சுறுத்தலாகும். பீரங்கியால் உருவாகும் அச்சுறுத்தல்களின் அனுபவங்களை வவுனியா அனுபவித்து விட்டது.

வவுனியா நகரம், வவுனிய விமான நிலையம் ஆகியன உட்பட்ட பாதுகாப்பு வலயம் விடுதலைப் புலிகளின் முக்கிய பீரங்கித் தாக்குதல் இலக்குகளாக அமைந்துள்ளன.

### 8 ஆயிரம் எறிகணைகள்

முல்லைத்தீவு முகாமிலிருந்து கைப்பற்றப்பட்ட 8 ஆயிரம் பீரங்கிகளுக்கான எறிகணைகள் விடுதலைப் புலிகளிடம் இருப்பதாகக் கூறப்படுகிறது. இவற்றில் சில கடந்த சில நாள்களாக வவுனியா நகர் மீதும் பாதுகாப்பு நிலைகள் மீதும் ஏவப்பட்டுள்ளன.

வவுனியா விமான நிலையம் விடுதலைப் புலிகளின் முக்கிய தாக்குதல் இலக்காக அமைந்துள்ளதால் அங்கிருந்து மேற்கொள்ளப்பட்ட அனைத்து வான் நடவடிக்கைகளும் தற்போது அனுராதபுரம் விமான நிலையத்திலிருந்து மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

வவுனியா விமான நிலையத்தில் வான் கலங்களும் தரையிறங்குவதில்லை. பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தத் தற்காலிக ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விமானப்படை தெரிவிக்கிறது.

எவ்வாறாயினும் இந்த யுத்தத்தில் சாதகமான நிலை தற்போது விடுதலைப் புலிகள் பக்கம் திரும்பியுள்ளது என்பதை பீரங்கி அச்சுறுத்தல் எடுத்துக் காட்டுகிறது என்பதே இராணுவ ஆய்வாளர்களின் கருத்தாகும்.

(ஐ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்பு கொள்ளவும்

யாழ். நகர், கே. கே. எஸ். வீதியில் உள்ள சுகந்தினி பலசரக்கு மாளிகையின் உரிமையாளர் சந்திரமோகனை இக்கடை தொடர்பில் கடையின் கட்டட உரிமையாளர் திருமதி கந்தையா சிறிவள்ளி நாயகி புத்தூர் மேற்கில் வந்து உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகிறார்.

சி. வீரகத்திப்பிள்ளை L, L. B.
சட்டத்தரணி பிரசித்த நொத்தாரிஸ்
132, கச்சேரி நல்லூர் வீதி,
முத்திரைச் சந்தை, யாழ்ப்பாணம். (45556)



## ஈசன் கல்வி நிலையம்

கே. கே. எஸ். றோட், கோண்டாவில்.

**A/L 97 PAPER CLASS**

பௌதிகவியல் - திரு. குமரன்
இரசாயனவியல் - திரு. றமேஸ்
விலங்கியல் - திரு. கெங்காதரன்

ஆரம்பம்: 10 - 03 - 1997 திங்கள் காலை 7.30
(45667)


## முதலாவது ஆண்டு நினைவு

### டாக்டர் இளையதம்பி மயில்வாகனம்

தோற்றம்: 10-10-1925 மறைவு: 17-2-1996


திதி: 07 - 03 - 1997

அமரரின் நினைவை என்றும் நினைவு கொள்ளும்:

மனைவி: இரத்தினாவதி
மகன்: சத்திரமோகன் (பிரான்ஸ்)
மதனமோகன் (அமரர்)
மகள்: மீனலோஜினி
மருமகள்: புஸ்பமலர் (பிரான்ஸ்)
சகோதரர்: நடராசா
கணபதிப்பிள்ளை (அமரர்)

பறாளை றோட்,
சுளிபுரம். (9357)

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 03-08-1959

மறைவு: 07-03-1992

### அமரர் சுப்பிரமணியம் இராஜலிங்கம்
(ராசா)

ஆண்டுகள் ஐந்து சென்றதையா
நீ எம்மை விட்டுச் சென்று.
எமக்கு நீ சென்றது ஐந்து விநாடிகள் போல்
உள்ளது. எப்படி மறப்போம் ராசா உன்னை.
உன்னைப் போலவே உன் உருவத்துடனே
நான்கு செல்வங்களைத் தந்தது நீ எம்மை
விட்டுச் செல்லவா?
உன் இனிய முகத்தை உன் செல்வங்களின்
முகங்களில் காண்கிறோம் ராசா.
ஐந்து ஆண்டுகள் சென்றாலென்ன,
ஐந்நூறு ஆண்டுகள் சென்றாலும்
ராசா உன்னை ஒருநாளும் மறவோம்.
உன் அருமைச் செல்வங்களும்.

நினைவில் நிறுத்துவர்:
பெற்றோர், சகோதரங்கள், பிள்ளைகள்.

வளாகலேன்.
திருநெல்வேலி. (45668)

# வலி. வடக்கில் மக்கள் மீளக்குடியமர கொள்கை அளவில் அரசு இணக்கம்

## யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 7

வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவில் தெல்லிப் பழை, ஏழாலைப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை அங்கு மீளக்குடியேற்ற அரசாங்கம் கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளது என்று யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

எவ்வளவு பிரதேசத்தில் மக்களைக் குடியேற்றுவது, அதனை எப்போது செயற்படுத்துவது என்பன குறித்து இன்னமும் முடிவு செய்யப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு மீளக் குடியேறுபவர்கள் உடனடியாகத் தமது அன்றாட வாழ்வை ஆரம்பிக்க வசதியாக அவர்களுக்கு உதவிகளை வழங்க அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் முன்வந்துள்ளது.

மீளக் குடியேற அரசு அனுமதி வழங்கினாலும் மக்கள் உடனடியாக அங்கு செல்வதைத் தவிர்க்கவேண்டும் என்றும் —

கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றப்பட்ட பின்பே மக்கள் அப்பகுதிகளுக்குச் செல்ல முடியும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை — தெல்லிப் பழை வரையான பகுதிகளில் மக்களை மீளக்குடியேற்ற வசதியாக படையினர் அங்கு தமது பாதுகாப்பு அரண்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (ஐ-3)

# இலங்கைத் தமிழர்களின் நிலை குறித்து கருணாநிதி கவலை

சென்னை, மார்ச் 7

''இலங்கையில் தொடர்ந்து வரும் பிரச்சினைகளால் அங்கு வாழும் தமிழர்கள் இலங்கைக்குள்ளேயே அகதிகளாக வாழும் அவல நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பது ஆறாத்துயரம் அளிக்கிறது. இலங்கைத் தமிழர்களின் பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் அணுகுமாறு இலங்கை அரசுக்கு எடுத்துரைக்கும் படி இந்திய மத்திய அரசைக்கேட்டுள்ளேன்.''

இப்படி தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தமிழ் நாடு சட்டப் பேரவையில் நேற்று நடைபெற்ற வரவு செலவுத்திட்ட உரையில் தெரிவித்தார்.

தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு வழங்கப்படும் உதவித் தொகை 150 ரூபாவில் இருந்து 200 ரூபாவாக உயர்த்தப்படும். அவர்களுக்கும் இலவச வேட்டி, சேலை வழங்கப்படும்.

அகதிகளின் வாழ்க்கை நிலையை மேம்படுத்த உதவும் வகையில் முகாமுக்கு வெளியில் சென்று வேலை செய்து சம்பாதித்துக் கொள்ளவும், இவர்களின் குழந்தைகள் அருகிலுள்ள கல்வி நிலையங்களில் கல்வி கற்கவும் தமிழக அரசு அனுமதித்துள்ளது.

இவர்கள் தங்கியிருக்கும் குடியிருப்பு முகாம்களை 97, 98 ஆம் ஆண்டுகளில் 5கோடி 63 லட்சம் ரூபா செலவில் புதுப்பிக்க தமிழக அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இப்படி கருணாநிதி மேலும் கூறினார். (இ-4)

# கொழும்பிலிருந்து கப்பலில்மருந்து; ஆனால் அவசியமானவை இல்லை

யாழ். போதனாவைத்திய சாலையின் இந்த ஆண்டு பாவனைக்கான முதல் காலாண்டு மருந்து வகைகளில் ஒரு பகுதி நேற்று கொழும்பில் இருந்து செஞ்சிலுவை சர்வதேசக் குழுக் கப்பல்மூலம் எடுத்து வரப்பட்டுள்ளது.

முக்கியமான சில தட்டுப்பாடான மருந்து வகைகள் வந்தபோதிலும் சத்திரசிகிச்சைக்கான அத்தியாவசிச் உபகரணப்பொருள்கள் மற்றும் விசர்நாய்க் கடிக்கான தடுப்பூசி மருந்து ஆகியன அனுப்பி வைக்கப்படவில்லை என ஆஸ்பத்திரிவட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (இ-15)

## தவக்காலச் சிந்தனை

(24 நாள் வெள்ளிக்கிழமை)

''நானே வழியும், உண்மையும் உயிரும்'' என்று கூறியவரை சட்ட வல்லுநர்கள், தங்களைத் தாங்களே தலைவர்கள் ஆக்கிக் கொண்டவர்கள். பொய்க் குற்றஞ்சாட்டினர். தமக்கு பக்க பலமாக கடவுள் மக்கள் தாம் என இறுமாப்புக் கொண்டிருந்த யூத மக்களையும் சேர்த்துக் கொண்டனர். உண்மையைக் கூறிய இயேசுவுக்கு கிடைத்தது. சிலுவை மரணம். உண்மையா. அது என்ன? என்று ஏளனம் செய்தான்பிலாத்து. இன்றும் நாம் இறைவனின் மக்கள், ஒரே இனம் என்பதை மறந்து இறுமாப்புக் கொண்டு, மனிதமாண்பினை மதியாது, தான் கொண்ட சாதி, சமயம்தான் பெரிதென வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தமது சுயலாபத்திற்காக அரசியல் தந்திரங்களைக் கையாண்டு உண்மையை விலை பேசுகின்றனர் சிலர். உண்மையைப் பகைப்பவர்கள் ஒன்றுகூடி ஒப்பந்தங்கள் செய்வதால் உண்மை தனிமைப் படுத்தப்படுகிறது. இன்றும் உண்மைக்கு உதவி செய்வது போல் நடிப்பவர்கள் இருக்கின்றார்கள். உண்மை கறைபடும் பொழுது வீறு கொண்டு எழுந்து கறைகளைத் துடைக்கின்றனர் சிலர். உண்மை எனது குடும்பத்தில் நான் வாழும் சமுதாயத்தில், பணித்தலத்தில் எப்படியாக உள்ளது?, வெறும் வெளி வேடமா? வெள்ளையடிக்கப்பட்ட கல்லறையா?

சூ. மரியநாயகம்


**A/L 99**
கணக்கியல்
புதிய பிரிவு
ஆசிரியர்:
Mr. கொலின்ஸ்
ஆரம்பம்: 8-3-97 1 மணி
புதிய
உயர் கல்லூரி
[illegible]
(45672)



## CONGRATULATIONS

**VEENA MANOHARAPOOPAN**

அத்தியடி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்வி **வீணா மனோகரபூபன்** லண்டன் CIMA Part 4 (Final) பரீட்சையில் 2A, B. C. பெறுபேறுகளைப் பெற்று சிறப்பாகச் சித்தி பெற்றுள்ளார். கொழும்பு- பல்கலைக்கழகத்தில் Management 3 ஆவது வருடத்தில் படிப்பைத் தொடர்ந்து கொண்டிருக்கும் Holy Family Convent, Jaffna க.பொ.த. உயர் தரத்தில் சிறப்பாக சித்தியடைந்த மாணவ தோழியாகிய இவரை மென்மேலும் சிறப்புகள் பெற அன்போடு வாழ்த்துகிறோம்.

பழைய மாணவிகள், தோழிகள்
HOLY FAMILY CONVENT,
JAFFNA.

(45666)



புலோலி
## பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் தேவஸ்தானம்
(பருத்தித்துறை சிவன் கோயில்)

## மகா சிவராத்திரி விழா

இன்று (07-03-1997) வெள்ளிக்கிழமை இரவு நான்கு ஜாமப் பூசைகளுடன் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

சிறப்பு நிகழ்வாக நள்ளிரவு
ஈழநல்லூர்
அருணா இசைக்குழு
வழங்கும்
அமுதகானங்கள்

விளம்பர உதவி:
செம்பருத்தி சைவ தேநீர்ச்சாலை,
பருத்தித்துறை.
(சி/250)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவ விரதங்களில் சிறந்த சிவராத்திரி

கூட்டுக்கடங்காமல் அலைந்து திரியும் மனம் குறிப்பிட்ட சில நாள்களில் தானாகவே முயற்சி ஏதுமின்றி அமைதியாகிவிடுகின்றது. அத்தகைய நாள்களையே விரதநாள்களாகக் கூறலாம். புண்ணிய விரத நாள்களில் பக்தியுடனும் அன்புடனும் நோன்பிருந்து ஆலய வழிபாடு செய்து திருமுறைகளை ஓதி, திருவைந்தெழுத்தைச் செபித்து இறை வழிபாடு புரிபவர்கள், பாவங்களினின்றும் நீங்கி புண்ணியம் பெற்று இகம், பரம், வீடு என்ற மூன்று நலன்களையும் எளிதில் பெறுவார்கள்.

ஆன்மீக நாட்டம் கொண்டவர்களுக்கு இரவு சிறப்பாகப் பயனளிக்கிறது. அப்பொழுது இறைவனிடம் எளிதாக மனம் குவியும். ஆதலால் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் அனைவரும் ஆழ்ந்து தூங்கும் இரவு நேரத்தில் தமது சீடர்களை எழுப்பித் தியானம் செய்யச் சொல்வது வழக்கம். ரிக் வேதம் இரவை ''தெய்வ மகள்'' என்று குறிப்பிடுகின்றது. சிவ வழிபாட்டிற்கு உகந்த நேரம் இரவு என்பதால் அந்த விசேட விரத நாளையே சிவராத்திரி என்றார்கள்.


மகாசிவராத்திரி, பட்ச சிவராத்திரி, யோக சிவராத்திரி, நித்திய சிவராத்திரி என பல வகைச் சிவராத்திரிகளைப் பற்றி புராணங்கள் கூறுகின்றன. பொதுவாக சிவராத்திரி என்பது மாசி மாதத்தில் வரும் மகாசிவராத்திரியையே குறிக்கும்.

சிவவிரதங்களில் சிறந்தது சிவராத்திரி விரதமாகும். இத்தினத்தில் ஈசனை வழிபட்டால் சிறந்த பயனைத் தரும் என்று புராணங்களும், சைவாகமங்களும் கூறுகின்றன; மகான்களும் அவ்வாறே கூறியுள்ளனர். இப்புண்ணிய நன்னாளில் உபவாசம் இருந்து கண்விழிப்பதன் நோக்கமே ஆண்டவனை இடைவிடாமல் தியானிப்பதற்காகத் தான்.

### விரதத்துக்கு விரோதம்

ஆனால் நம்மில் பலர் சீட்டாடுவதில், சினிமாப்படம், நாடகம் பார்ப்பதில் அல்லது வேறு ஏதாவது வகையில் நித்திரை விழித்தால் போதும் என்று கருதி அறியாமையால் விரதத்திற்கே விரோதமான செயலில் ஈடுபடுகின்றார்கள். இவ்வாறு செய்வது குளிக்கச் சென்று சேறு பூசுவது போலாகும்.

சிவராத்திரி இரவில் கண் விழிக்காதவர்கள் இறைவனை நினைக்காத குற்றத்திற்கு மட்டும் ஆளாவார்கள். ஆனால் இத்தினத்தில் பிறசெயல்களில் மனத்தை ஈடுபடுத்துபவர்களோ இறைவனை நினைக்காத குற்றத்துடன் மேலும் பாவத்திற்கு உள்ளாவார்கள். ஆகவே கேளிக்கைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவேண்டும்.



ஆசையுள்ளவர்களும், அறவர்களும், அதாவது துறவிகள், இல்லறத்தார், ஆண், பெண், ஆகிய அனைவரும் அனுஷ்டிக்க வேண்டிய சிறந்த விரதம் சிவராத்திரி விரதமாகும். இப் பெருமை மிக்க விரதத்தில் ஈடுபட ஆரோக்கியமும் மன உறுதியும் அவசியம். இதனைச் சிவ மகாபுராணம் வலியுறுத்துகிறது.

சிவராத்திரிக்கு முதல் நாளன்று சாதாரண உணவு உட்கொள்ள வேண்டும். சிவராத்திரி அன்று உணவு உண்ணக் கூடாது. அன்று அதிகாலையில் ''ஓம் நீலகண்டா! நான் சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்க விரும்புகின்றேன். ஆசைகள் என்னை அணுகாமலும் என் விரதத்தை தடையேதுமின்றி நிறைவேற்றவும் அருள்புரிய வேண்டும்'' என்று வேண்டிக் கொள்ள வேண்டும்.

அன்று பகல் முழுவதும் நித்திரை கொள்ளாமல் ஆன்மீகப் புத்தகங்களைப் படிப்பதிலும் தியானம் செய்வதிலும் ஈடுபட்டு இறைவனையே நினைத்தபடி இருத்தல் வேண்டும். மாலையானதும் கோயிலுக்குச் சென்று நான்கு சாமப் பூசை வழிபாடுகளில் ஈடுபட வேண்டும். சிவநாம பஜனை, பஞ்சாட்சர ஜெபம் முதலியவற்றை ஓதி வழிபடல் வேண்டும். மறுநாள் அதிகாலை நித்திய கருமம் முடித்து எட்டரை மணிக்கு முன் பாரணை செய்வது விதியாகும்.

### லிங்கோற்பவம்

இரவு 11.30 மணி முதல் 12.15 வரையிலான காலம் லிங்கோற்பவ முகூர்த்த காலமாகும். இரவு முழுவதும் விழித்திருக்க முடியாதவர்கள் லிங்கோற்பவ காலம் முடியும் வரையாவது விழித்திருத்தல் நன்று. இன்றைய சூழ்நிலையில் ஆலயம் சென்று வழிபட முடியாதவர்கள் வீட்டில் பூசை அறையில் சிவபெருமானின் படம் அல்லது லிங்கம் போன்றவற்றை வைத்து அலங்காரம் செய்து இரவு நான்கு சாமங்களிலும் சிவ பூசை செய்து வழிபடலாம்.

வீட்டிலிருந்து தேவாரம், திருவாசகம், சிவபுராணம், சிவமகிமை ஸ்தோத்திரம், ஸ்ரீருத்திரம், பக்திப் பாடல்கள் முதலியவற்றை குடும்பமாக இருந்து படிப்பது மிகுந்த நன்மைபயக்கும்.

### சிவராத்திரிச் சிறப்பு

இராஜசேகர பாண்டிய மன்னன் வெள்ளியம் பலத்தில் சிவராத்திரியில் நான்கு சாமப் பூசைகளைச் செய்வித்து இறைவனைக் கால் மாறி ஆடுமாறு வேண்டிய பொழுது இறைவன் கால் மாறி ஆடினான் என திருவிளையாடற் புராணம் கூறும்.

நம் நாட்டவராகிய சுன்னாகம் வரத பண்டிதர் அவர்கள் சிவராத்திரி விரதத்தின் சிறப்பை எடுத்துரைக்க ''சிவராத்திரிப் புராணம்' என்ற ஒரு தனியான புராணத்தையே ஆக்கியுள்ளார். சிவராத்திரிக்கு ஒப்பான வேறு சிறந்த விரதம் இல்லை என்று பாமசிவன் பார்வதிக்குப் பகன்றதாக புராணங்கள் கூறியுள்ளன.

படைப்புக் கடவுளாகிய நான்முகனும் காத்தற் கடவுளாகிய திருமாலும் ஆணவத் திமிரால் வாதிட்ட பொழுது அவர்கள் அருகே சிவன் அக்கினிப்பிழம்பாகத் தோன்றி அவர்களது செருக்கை அடக்கிய இரவே சிவராத்திரி நன்னாள் என்பார்கள்.

''அறத்தை சிறிது கடைப்பிடித்தாலும் அது பெரும் அபாயத்திலிருந்து நம்மைக் காக்கும்'' என்று கீதை உபதேசிக்கிறது. ஆகவே சாஸ்திரவிதிப்படி முழு அளவில் விரதம் அனுஷ்டிக்க முடியாவிட்டாலும் இயன்றளவு கடைப்பிடிக்க முயலவேண்டும். பிறவிப் பெருங்கடலைக் கடப்பதே எமது நோக்கம். அதற்காகவே விரதம், பூசை, பாராயணங்களும் அமைந்துள்ளன. ★

—சமூகஜோதி கா. கணேசதாசன்

## சிவராத்திரிகள் ஐந்து வகை

சிவராத்திரி என்பதற்கு மங்களகரமான இரவு என்பது பொருள். இந்த உலகம் முழுவதும் மகா பிரளயத்தில் சிவபெருமானிடம் ஒடுங்கிய நாளே 'மகா சிவராத்திரி' என்று சைவசமயம் கூறுகின்றது.

சிவராத்திரி ஐந்து வகைப்படும். அவை: நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாத சிவராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என்பனவாகும்.

★ **நித்திய சிவராத்திரி:-** ஒவ்வொரு சதுர்த்தசியிலும் சிவபூசை செய்து ஒரு வருடத்தில் 24 சிவராத்திரி பூசை செய்ய வேண்டும்

★ **பட்ச சிவராத்திரி:-** தைமாதம் கிருஷ்ணப் பிரதமை முதல் தொடங்கி, 13 நாள்கள் தினமும் ஒருவேளை உணவு உட்கொண்டு சதுர்த்தசியில் பூசை செய்ய வேண்டும்.

★ **மாத சிவராத்திரி:-** மாசி கிருஷ்ண சதுர்த்தசி, பங்குனி மாதத்தில் முதலில் வரும் திருதியை, சித்திரை கிருஷ்ண அட்டமி, வைகாசி முதல் அட்டமி, ஆனி சுக்ல சதுர்த்தி, ஆடி கிருஷ்ண பஞ்சமி, ஆவணி சுக்ல அட்டமி, புரட்டாதி முதல் திரயோதசி, ஐப்பசி சுக்ல துவாதசி, கார்த்திகை முதல் சப்தமியும் அட்டமியும், மார்கழி இரு பட்ச சதுர்த்தசிகள், தைசுக்ல திருதியை — இவை அனைத்தும் மாத சிவராத்திரி எனப்படும்.

★ **யோக சிவராத்திரி:-** இது சோமவாரத்தன்று அறுபது நாழிகையும் அமாவாசை இருக்கும் நாளில் வரும்.

★ **மகா சிவராத்திரி:-** மாசிமாத கிருஷ்ணபட்சம், சதுர்த்தசி இரவு மகா சிவராத்திரி புண்ணிய காலமாகும். அன்றைய இரவு லிங் கோற்பவ காலம் சிவ வழிபாட்டுக்குரிய உத்தர காலமாகும்.

சைவப்புலவர் செ. பரமநாதன்

## மகாசிவராத்திரி குறித்து பாபா

இன்று மகா சிவராத்திரி. தினந்தோறும் ஒரு இரவு வந்து போவதை நாம் உணர்ந்திருக்கிறோம். அவை எல்லாம் சாதாரண இரவுகள். இருள் மிகுந்தவை. இது சிவராத்திரி. மங்களகரமான இரவு. எப்படி இதனை மங்களகரமானது என அழைக்க முடியும்? மனதிற்கு சம்பந்தமானது பதினாறு கலைகள். 'சந்த்ரமா மனஸோ ஜாதா ஸட்சோ சூர்ய அஜாயதா' என மனித வாழ்க்கையில் பலவித நிலைகளை குறிப்பிடலாம்.

இந்த மார்க சீர்ஷ சதுர்த்தசி திதியன்று மனதைச் சுற்றியிருக்கும் பதினாறு கலைகளில் பதினைந்து கலைகள் சற்று விலகியிருக்க, தெய்வத்துவத்தை சுலபமாகப் பற்றிக்கொள்ளும் வாய்ப்பு அதிகம் இருக்கின்றது. அதனாலேயே இன்றைய இரவு மங்களகரமானது என அழைக்கப்படுகிறது. நம்மனதை இறைவனை நோக்கிச் செலுத்துவதே மங்களகரமானது. மனிதனிடம், மிருக குணங்கள் அதிகம் தங்கியிருக்கின்றன.

சிவராத்திரி வருடத்தில் ஒருமுறை வருகின்றது. ஆனால் மங்களகரமான உணர்வுகளும், எண்ணங்களும் நம்மிடையே நிரந்தரமாக இருக்கின்றன.

'சர்வதா சர்வகாலேஷு சர்வத்ரா ஹரிசிந்தனம்' எப்போதும், எந்நேரமும் இறைவனை நினைத்திருங்கள்.

இதுவே உண்மையான சிவம். இதுவே நிஜமான ராத்திரி. இரவு என்றால் இருள். சிவராத்திரி என்பது அஞ்ஞான இருளை விலக்கி வைப்பது எனப் பொருள். இவ்வாறாக நம்பிக்கையை வளர்த்துக் கொண்டு, தீயகுணங்களை ஒதுக்கி வைத்து, நல்ல வழிகளில் சென்று, கடவுளின் அருளுக்குப் பாத்திரமாக வேண்டும். ''பிரும்மவித் பிரும்மைவ பவதி'' என்றபடி நீங்களும் தெய்வ வடிவினராக மாறவேண்டும்.

# தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் புலிகளின் அடுத்த இலக்காகலாம்!

## பொலிஸார் எச்சரிக்கை

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான பிரசாரக் கூட்டங்களுக்கு அதி உச்ச பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பெரிய அளவில் நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றை இலக்கு வைத்து விடுதலைப் புலிகள் குண்டு வெடிப்புத் தாக்குதல்களை மேற்கொள்ளலாம் என்ற சந்தேகம் காரணமாகவே இவ்வாறு அதி உச்ச பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள் உட்பட அரசியல் கட்சித் தலைவர்கள் பங்கு பற்றும் பிரசாரக் கூட்டங்கள் தொடர்பாக புலிகளின் கவனம் திரும்பியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

பொதுமக்கள் மிகப் பெரிய அளவில் கூடும் இவ்வாறான முக்கிய கூட்டங்களில் கட்சி ஆதரவாளர்கள் பட்டாசுகளைக் கொளுத்தி ஆரவாரக் கோஷங்களை எழுப்பும் நேரங்களில் அதை விடுதலைப் புலிகள் சாதகமாகப் பயன்படுத்த வாய்ப்புகள் உள்ளன என்று பாதுகாப்புத் துறையினர் கருதுகின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தொட்டலங்க என்ற இடத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஐ.தே. கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸநாயக்கா உட்பட அக்கட்சியைச் சேர்ந்த முக்கிய தலைவர்கள் பலர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை பொலிஸார் கவனத்தில் எடுத்துள்ளனராம்.

விசேடமாக இவ்வாறான பாரிய பேரணிகளின் போது மக்கள் மத்தியில் கலவரங்களை ஏற்படுத்தும் சத்தமிகு பட்டாசுகளைக் கொளுத்துதல், பெரிய அளவில் பேரணிகளை நடத்துதல் ஆகியன பொலிஸாரால் தடை செய்யப்பட்டுள்ளது. (ஐ-10)

## மாதா திருநாள்

யாழ். அருள் ஆச்சிரமத்தில் லூர்து மாதா திருநாள் வழிபாடு அண்மையில் நடைபெற்றது.

யாழ். ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் திருப்பலி பூசை இடம்பெற்றது.

## யோகர் சுவாமி சிலை பிரதிஷ்டை

வடமராட்சி, மார்ச் 7

தவமுனிவர், செல்லப்பா சுவாமிகளின் சீடரான தவத்திரு யோகர் சுவாமிகளின் திருவுருவச் சிலை, வண்ணார் பண்ணையில் உள்ள சிவ தொண்டன் நிலையத்தில் பிரதிஷ்டை செய்து வைக்கப் படவுள்ளது.

இம்மாதம் 20 ஆம் திகதி வியாழக்கிழமை சிவதொண்டன் நிலையத்தில் யோக சுவாமிகளின் குருபூசைத் தினத்தன்று சிலை பிரதிஷ்டை செய்துவைக்கப்படும்.

தமிழ் நாடு சிதம்பரத்தில் உருவாக்கப்பட்ட இச்சிலையை பிரதிஷ்டை செய்து வைப்பதற்கான சகல ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இப் பிரதிஷ்டை செங்கலடி சிவ தொண்டன் நிலைய பொறுப்பாளர் சுவாமி செல்லத்துரையின் அனுசரணையுடன் இடம் பெறும்.

(ஐ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

15 மாதம் நிரம்பிய அழகிய பொமனேரியன் ஆண் நாய் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வராசா, 107, டேவிற் வீதி, யாழ்ப்பாணம். (9351)

கொழும்புத்துறையில் சகல வசதிகளுடன் இரண்டேமுக்கால் நிலப்பரப்புடன் வீடு விற்பனைக்குண்டு. பதிவுத் தபால் மூலம் மட்டும் தொடர்பு கொள்ளவும். யோ. சத்தியநாதன், சட்டத்தரணி & நொத்தாரிஸ், 34 (16), நெடுங்குளம் வீதி, கொழும்புத்துறை. (45656)

8 அடி உயரம் 12 அடி அகலம் உடைய கடைக்குரிய புதிய இரும்பு சுருக்கு கேற், இத்தாலியன் மாபிள் வகைகளும் விற்பனைக்குண்டு. தொடர்பு: வரணி பாமசி உரிமையாளர், தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். (45661)

நல்ல இன அல்சேஷன் நாய் விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம்: காலை 9 - 12 மணி. முகவரி: வை. மதியாபரணம் சங்கரப்பிள்ளை வீதி, மூத்தவினாயகர் கோயிலடி, ஆனைக்கோட்டை. (45635)

இறைச்சிக் கோழி (Broiler) விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.15, மெமோரியல் வீதி, மானிப்பாய். (மெமோரியல் ஆங்கில பாடசாலை முன்பாக) (45542)

### மணமகன் தேவை

சைவ குடும்பம், பூர நட்சத்திரம், கிரக பாவம் 12, வயது 30, நோர்வேயில் இருக்கும் எலக்ரோனிக் அன்ட் கொம்பியூட்டர் (M. Sc.) பொறியியலாளருக்கு, படித்த அழகிய மணமகள் தேவை. ஸ்பொன்சர் செய்யப்படும். சைவ போசனம் விரும்பத்தக்கது. புகைப்படம், சாதகத்துடன் தொடர்பு: சு. ஆனந்தன் ஆசிரியர், மட்டுவில் வடக்கு சாவகச்சேரி, பொருத்தமற்றவை திருப்பித்தரப்படும். (சி/242)

### அன்பளிப்பு

''சர்வதேச மகளிர் தினம்''— மார்ச் 8 ''பெண்களே உங்களுக்கு'' மூதறிஞர், பல்கலைப் புலவர், குலரத்தினம் அவர்களால் தொகுக்கப்பெற்றது. மில்க்வைற் நீலசோப், பார், மெடிக்கேற்றற் சோப், சலவைத் தூள் 5 மேலுறைகளுக்கு வழங்கப்படும். ''மில்க்வைற்'' (சி/ 215)

### வீடு தேவை

பிறவுண் வீதி, நீராவியடிப் பகுதியில் வங்கி உத்தியோகத்தருக்கு வாடகைக்கு வீடு தேவை. தொடர்பு! மே/பா இல; 596, உதயன, யாழ்ப்பாணம். (45657)

## சிரமதானப் பணி

கொழும்புத்துறை, மார்ச் 7

யாழ். இணுவில் கலாஜோதி விளையாட்டுக் கழகத்தினர் கடந்த பெப்ரவரி மாதம் 2 ஆம், 22 ஆம் திகதிகளில் சிரமதானப் பணிகளைக் கூட்டாக மேற்கொண்டனர்.

இச் சிரமதானத்தின் போது இணுவில் ஆஸ்பத்திரியினால கடந்த காலங்களில் கொட்டப்பட்ட கழிவுகள், பாத்திரங்கள், போத்தல் ஓடுகள், தகரங்கள் போன்ற பொருள்களும் மற்றும் நாகதாளிப் பற்றைகளும் துப்புரவு செய்யப்பட்டுள்ளன. (இ-30)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் நல்லதம்பி இராசரத்தினம்

மலர்வு: 25–11–1922 உதிர்வு: 02–03–1996

**திதி: 7-3-1997**

ஓராண்டு சென்றதே நாம் ஓலமிட்டழுது என்ன பயன் ஐயா? தீராது நம் கவலை என்றுமே மாறாது எம் துயர் ஐயா! பாராளும் வேந்தரும் ஓர் நாள் பிடிசாம்பராவது உண்மை ஐயா! ஆராரும் எமக்கு ஆறுதலே சொல்வீர்.

உங்கள் ஆத்மா சாந்தியுற எல்லாம் வல்ல பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
**மனைவி, மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்.**

நாவலடி லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். ([illegible])

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பாக்கியம் இராமலிங்கம்

(ஓய்வு பெற்ற ஆசிரியை,
நாவலர் வித்தியாலயம், கோப்பாய்.)

அன்னை மடியில்: **24 - 03 - 1931**
அரனடியில்: **20 - 02 - 1993**

**திதி: 07 - 03 - 1997**

அன்பாகவும், பாசமாகவும் மனதில்
கலங்க மில்லாக்கனிவுறு சொல்லினாலும்
சிரித்த முகத்துடனும் எம்மை எல்லாம் வழி நடத்திய
தலைவியே! உங்களை நாம் என்றும் மறவோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
**அன்புக் கணவன், உற்றார், உறவினர்.**

நாவலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (45655)

## விவசாயிகள் ஒய்வூதியம்

யாழ்ப்பாணம், மார்ச் 7

யாழ். மாவட்டத்தில் உள்ள விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் பெப்ரவரி மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் திங்கட்கிழமை கமத்தொழில் காப்புறுதிச் சபை மாவட்ட அலுவலகத்தில் வழங்கப்படவுள்ளது. (ஐ)

சர்வம் சிவமயம்

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

07 - 03 - 1997



பிறப்பு: 21 — 05 — 1926

இறப்பு: 22 — 01 — 1997

### திருமதி கணபதிப்பிள்ளை செல்லம்மா

கடந்த 22-01-1997இல் சிவபதமடைந்த திருமதி கணபதிப்பிள்ளை – செல்லம்மாவின் மரணச்சடங்கில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் சகலரையும் 07-03-97 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி வைபவத்திலும், மதிய போசனத்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்''

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

தகவல் தருபவர்:
க. சரவணபவானந்தன் (கிளி) - மகன்
யாழ். பல நோ. கூ. சங்கம்

இல. 12, 2ஆம் குறுக்குத்தெரு,
கொழும்புத்துறை. (45664)

## ஓராண்டு நினைவலைகள்



### திருமதி தர்மலிங்கம் கனகேஸ்வரி

மலர்வு: 05–04–1939 உதிர்வு: 16–02–1996

**திதி: 07-03-1997**

**அன்பில் மலர்ந்த கனியமுது**

ஓராண்டு சென்றதம்மா ஓய்வில்லை நம்கவலை
வாயார அம்மாவென்று அழைத்திடவே நீங்களில்லை
சீராக எமைவளர்த்து சீர்பலவும் செய்தீரே
சடுதியிலே ஏனம்மா எமைவிட்டுப் பிரிந்தீர்?
மனையாளை இழந்து கணவனிங்கு கலங்குகிறார்
அன்னையினைப்பிரிந்து குஞ்சுகள்யாம்தவிக்கின்றோம்
மாமிதனை இழந்து மருமகளும் புலம்புகிறாள்
மாநிலத்தில் இனியெப்போ நின்வதனம்
கண்டிடுவோம்!

பிரிவினால் துயருறும்:
**கணவன், பிள்ளைகள், மருமகன், உறவினர்,**

''அன்பில்''
20/1, பாரதி வீதி,
கச்சேரி கிழக்கு,
யாழ்ப்பாணம். (45652)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சிவராத்திரிக்கு ஊரடங்கு நீக்கம்

சைவ சமய மக்களின் சிறப்பு மிகு விரத நாளான மகா சிவராத்திரி இன்றாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழும் சைவ மக்கள் இன்று இரவு ஆலயங்களுக்குச் சென்று வழிபாட்டிலும் பிரார்த்தனையிலும் ஈடுபட முடியுமா என்ற சந்தேகம் நேற்று முன்தினம் வரை நிலவியது. காரணம் எல்லோருக்கும் தெரிந்ததே.

வலிகாமத்தை அரசாங்கப் படையினர் கைப்பற்றிய 1995 டிசம்பர் மாதத்தில் இருந்து இரவு நேர ஊரடங்கு நடைமுறையில் உள்ளது. இடம் பெயர்ந்த மக்கள் வலிகாமம் வந்து மீளக் குடியமர்ந்த பின்னர் ஊரடங்கு நேரங்கள் காலத்துக்குக் காலம் மாற்றப்பட்டன. சமீப காலமாக இரவு 8 மணி தொடக்கம் காலை 5 மணி வரை ஊரடங்கு என்று கொள்ளப்படுகிறது. உத்தியோக பூர்வ அறிவித்தலும் அதுவே. ஆனால் இராணுவ வீதிச் சோதனை நிலையங்களைப் பொறுத்து இரவு ஏழு மணிக்குப் பின்னர் வீதியால் செல்வது மக்களுக்குக் கஷ்டமாகவும் வீண் தொல்லையாகவும் முடிந்துவிடுகிறது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், சிவராத்திரி விரதத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, இன்றைய இரவு ஊரடங்கு ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

சைவசமய மக்கள் சார்பில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளைக் கவனத்தில் எடுத்து, இன்று இரவு மட்டும் ஊரடங்கை நீக்குவதற்கு 51 ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பலகல்ல நடவடிக்கை எடுத்துள்ளார். மக்களின் வழிபாட்டுச் சுதந்திரத்தைப் பேணும் இந்த ஏற்பாடு வரவேற்கத்தக்கதாகும்.

கடந்த மார்கழியில் திருவெம்பாவை விழாவின் இறுதி நாளான ஆருத்ரா தரிசன நாளன்று கூட ஊரடங்கு நீக்கப்படாமல் மக்களின் வழிபாட்டுச் சுதந்திரம் மறுக்கப்பட்டது.

அந்த வகையில், மேஜர் ஜெனரல் பலகல்லவின் நடவடிக்கை மக்கள் நலன் நாடியதாகும். ஆயினும் வீதிச் சோதனை நிலையங்களில் பணிபுரியும் படையினரும் இரவு நேரச் சோதனைக்குச் செல்லும் படையினரும் உயர் அதிகாரியின் நோக்கத்தைப் புரிந்து கொண்டு நடக்க வேண்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும்.

இளைஞர், நங்கையர் ஆலய வழிபாட்டுக்காகச் செல்லும் வேளை அவர்களுக்கு வீண் தொல்லைகள் கொடுக்காமல் இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர்களைச் சந்தேகக் கண் கொண்டு பார்த்துத் தடுத்து நிறுத்துவதும், விசாரணைக்கு உட்படுத்துவதும் ஊரடங்கு நீக்கத்தினை அர்த்தமற்றதாக்கிவிடும்,

ஊரடங்கு நீக்கப்படாவிடில், வீடுகளில் சாமி அறைகளிலேயே தமது பிள்ளைகளுடன் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க வேண்டும் என்று பல பெற்றோர்கள் திட்டமிட்டிருந்தனர்.

ஊரடங்கு நீக்கம் என்ற செய்தி அந்த முடிவைமாற்றியிருக்கும் என நம்பலாம். ஆனால் பெற்றோரின் அந்த நம்பிக்கை வீண் போகாமல் இருப்பதில்தான் யாழ். குடாநாட்டு மக்களின் வழிபாட்டுச் சுதந்திரம் எந்தளவுக்கு பேணப்படுகிறது என்பது வெளிப்படும்.

# 'அன்ரனோவ்' விமானி மீது கொலை முயற்சி குற்றச்சாட்டு

## வழக்குத் தாக்கல் செய்ய முயற்சி

கொழும்பு, மார்ச் 7

கடந்த மாதம் 21 ஆம் திகதி இரத்மலானை விமான ஓடுபாதைக்கு அண்மையில் விழுந்து நொருங்கிய 'அன்ரனோவ் - 32' ரக விமானத்தை ஓட்டிய ரஷ்ய நாட்டைச் சேர்ந்த விமான ஓட்டி மீது கொலை முயற்சிக் குற்றஞ் சுமத்தி வழக்குத் தாக்கல் செய்ய பொலீஸார் நடவடிக்கை எடுத்துவருவதாக நம்பிக்கையான வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''லக்பிம'' சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சட்ட ஆலோசனைகள் பொலீஸாரால் பெறப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் பொலீஸார் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ள போதிலும் பொலீஸாரின் இந்த முயற்சி நியாயமான ஒன்றல்ல எனவும் இந்த நடவடிக்கையினால் விமானமோட்டிகளின் மனத்தைரியம் பாதிக்கப்படும் என்றும் சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விமான விபத்தில் 3 படையினர் கொல்லப்பட்டனர். 56 பேர் காயமடைந்தனர்.

விபத்து நடந்த வேளையில் விமானத்தின் தலைப் பகுதியை தேவையான உயரத்திற்கு உயர்த்தி விமானத்தின் சக்கரங்களை உட்புறமாக இழுக்க முயற்சித்தபோது வாயு சக்தியினால் செயற்படும் அவை சரிவர இயங்காது ஓடுபாதையுடன்தேய்ந்த வண்ணம் இருந்தன என்று சாட்சியங்களில் இருந்து தெரியவந்துள்ளது.

திடீரென ஏற்பட்ட இந்தக் குழப்பம் காரணமாக விமானமோட்டி மீண்டும் விமானத்தைப் பதித்துள்ளார். அவர் நினைத்தவாறு சக்கரங்கள் இயங்கவில்லை. அதற்குள் விபத்து நடந்து முடிந்துவிட்டது.

அனைத்துக் கோளாறுகள் பற்றியும் முடிவெடுக்க விமான ஓட்டிக்கு 3 வினாடிகள் மாத்திரமே கால அவகாசம் கிடைத்தது.

இந்த விமானத்தின் 'கறுப்புப் பெட்டி' ரஷ்யாவுக்கு அனுப்பட்டுள்ளதாகவும், அதில் இறுதி வினாடிவரை இடம்பெற்ற சமிக்ஞைகள் அனைத்தும் பதிவாகி உள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-10)

### உள்ளூராட்சித் தேர்தலில்

## பொ.ஐ. முன்னணிக்கு எமது ஆதரவு இல்லை

### சிறிமானி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 7

''உள்ளூராட்சித் தேர்தல்களில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியை எமது கட்சி ஆதரிக்கவில்லை.''

பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் (லலித் பிரிவின்) தலைவியும், பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அமைச்சராக அங்கம் வகிப்பவருமான சிறிமானி அத்துலத்முதலி இவ்வாறு கூறியிருக்கின்றார்.

அண்மையில் கண்டியில் பொதுக் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

''இது எனது கட்சியின் நிறைவேற்றுக் குழுவின் முடிவு. நான் அதனைப் பின்பற்றி நடக்கிறேன்.'' — இவ்வாறு அவர் அங்கு பேசுகையில் மேலும் தெரிவித்தார்.

(உ-150)

## வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் சென்ற ஜீப் யால காட்டில் கடத்தல்

வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் சென்ற ஜீப் ஒன்று கடந்த செவ்வாயன்று யால காட்டுப் பகுதியில் வைத்து இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் கடத்திச் செல்லப்பட்டது.

ஆயுத முனையில் பயணிகளை இறக்கி விட்டு ஜீப் கடத்திச் செல்லப்பட்டதாகவும் —

விடுதலைப் புலிகளே ஜீப்பைக் கடத்தியதாகத் தாங்கள் சந்தேகிப்பதாகவும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-150)

### ★ தப்பியோடிய

## கடற்படையினர் 200 பேர் சரண்!

கொழும்பு, மார்ச் 7

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களுக்கு சரண் அடைய அளிக்கப்பட்ட பொது மன்னிப்புக் காலத்தில் சரண் அடைந்த 200 கடற்படையினர் ஒழுங்கு நடவடிக்கைக்காகக் கொழும்பிலும், வடக்கிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கடற்படை வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களை சரண் அடையுமாறு விடுக்கப்பட்ட பொது மன்னிப்புக் காலத்தில் 200 கடற்படையினரும் சரண் அடைந்துள்ளனர்.

கடற்படையினர் மற்றும் விமானப் படையினரை சரண் அடையுமாறு கால அவகாசம் விதித்து பொது மன்னிப்பு வழங்கப்படும் என்ற அறிவிப்பு எதுவும் விடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்டிருந்த பொது மன்னிப்புக் காலத்தில் கடற்படையில் இருந்து தப்பி ஓடிய 200 பேர் சரண் அடைந்தனர்.

இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக ஒரு தொகுதியினர் கொழும்பிலும், மறு பகுதியினர் வடக்கிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்களில் சிலர் மீது வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பில் 90பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். சிலர் வெலிக்கடைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் தடுத்து வைக்க இடம் போதாததால் மறுபகுதியினர் வடக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (ஐ-3-150)

### நாளை

**மாசி 25**

**சனிக்கிழமை**

**திதி:** சதுர்த்தசி முற்பகல் 10-03 வரை.

**நட்சத்திரம்:** சதயம் முன்இரவு 11.40 வரை.

அமாவாசை விரதம்

**ராகுகாலம்:** 9.25-10.55

[illegible]

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப் படி)

## இன்று விடுமுறை

சிவராத்திரி தினமான இன்று வெள்ளிக்கிழமை இந்து அரசாங்க, வங்கி ஊழியர்களுக்கு மட்டுமல்ல, பாடசாலைகளில் கல்வி பயிலும் இந்து மாணவர்களுக்கும் அங்கு கடமையாற்றும் இந்து ஆசிரியர்கள், ஊழியர்களுக்கும் விடுமுறை ஆகும்.

கல்வி உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் பி.இ.தயாரத்தினா 7-11-96 ஆம் திகதி விடுத்த சுற்றறிக்கையில் இது மிக விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## பாராட்டு விழா

யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் 1996ஆம் வருட ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பாகச் சித்திபெற்ற மாணவர்களுக்கான பாராட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக யாழ். வலயம் — 1 பணிப்பாளர் திரு சு. இரத்தினராஜா கலந்து கொள்வார். (ஐ)

★ ★ ★

யாழ். வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பகவிநாயகர் கோயிலில் நாடு நலம்பெற வேண்டி பிரதி ஞாயிறு தோறும் நாமபஜனை செய்து வரும் பண்ணிசைப் புலவர் திரு. வே. சிவஞானம் அவர்களுக்கான பாராட்டு வைபவம் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 00 மணிக்கு மேற்படி கோயிலில் நடைபெறும்.

## மத்தியஸ்தம் குறித்து....

(முதலாம் பக்கத் தொடர்)

தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் நேரில் பேசி சில முடிவுகளை எடுப்பதற்காகவே அவர் வன்னிக்குச் சென்றிருப்பதாகத் தெரிகின்றது.

அண்மைக்காலமாக வெளிநாட்டு இராஜதந்திரிகள் பலருடனும் லோறன்ஸ் திலகர் தொடர் பேச்சுக்களை நடத்தி வந்திருக்கின்றார்.

சர்வதேச நாடுகளின் அனுதாபத்தை புலிகளின் பக்கம் திருப்புவதற்கான பணி லோறன்ஸ் திலகரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுக்கள் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடனேயே இடம்பெற வேண்டும் என புலிகள் வற்புறுத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது.

லோறன்ஸ் திலகருடன் பேச்சு நடத்திய சில வெளிநாட்டு ராஜதந்திரிகள், மத்தியஸ்த முயற்சிகளில் தாங்கள் ஈடுபட முன்னர், பேச்சுக்களில் அரசும் புலிகளும் ஆகக்கூடியது எதை எதை எல்லாம் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள் என்பதைத் தாங்கள் அறிய விரும்புவதாகக் கூறியுள்ளனர்.

இவ்வாறு விட்டுக்கொடுக்கக்கூடிய விடயங்கள் எவை என்பது குறித்து தலைவர் பிரபாகரனுடன் பேசி தீர்மானிப்பதற்காகவும்—

சில வெளிநாடுகள் தெரிவித்துள்ள முக்கிய இரகசியத் தகவல்களை பிரபாகரனிடம் நேரில் தெரிவிப்பதற்காகவுமே திலகர் வன்னிக்குச் சென்றிருக்கின்றார்.

★ சிலவிடயங்களை விட்டுக்கொடுப்பதற்கு புலிகள் இணங்கினால் மத்தியஸ்தம் செய்யத் தயார்.

★ அதன் பின் மத்தியஸ்த விடயத்தில் நியாயமான முறையில் ஒத்துழைக்க ஸ்ரீலங்கா அரசு மறுத்தால் புலிகளுக்கு இரகசியமாக உதவவும் தயார்.

இவ்வாறு மேற்குலக நாடு ஒன்று உறுதியளித்திருப்பதாகப் புலிகளின் வெளிநாட்டுக் கிளைகளில் பேசப்படுகின்றன.

### புலிகள் மறுப்பு

தலைவர் பிரபாகரனை வன்னியில் சந்திப்பதற்காக மேற்குலக நாடு ஒன்றிலிருந்து புலிகளின் வர்த்தகக் கப்பல் ஒன்று மூலமாக லோறன்ஸ் திலகர் புறப்பட்டார் எனக் கூறப்படுகின்றது. அக்கப்பலில் வந்த திலகர் இந்தியாவை அண்டிய கடல் பகுதியில் வைத்து புலிகளின் அதிவேகப் படகு ஒன்றுக்கு மாறினார். அதன் மூலம் கடந்த மாத மத்தியில் வன்னியின் நாச்சிக்குடாப் பகுதியில் சென்றிறங்கினார்.

எனினும் —

திலகர் வன்னி சென்றிருக்கின்றார் என்ற தகவலை புலிகளின் பாரிஸ் கிளை மறுத்துள்ளது.

''வேறு வேலையாக அவர் பாரிஸுக்கு வெளியே சென்றுள்ளார். அதனால் அவரை இன்னும் சில தினங்களுக்கு பாரிஸில் சந்திக்க முடியாது'' — என பாரிஸ் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அதிலிருந்து லோறன்ஸ் திலகர் பாரிஸில் இல்லை என்பது ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் வேறு நாடு எதிலும் அவர் தங்கியிருப்பதற்கான அறிகுறியும் இல்லை.

எதிர்வரும் மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் லோறன்ஸ் திலகர் வன்னியிலிருந்து பாரிஸ் திரும்பி விடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நிதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் விரைவில் குறிப்பிட்ட வெளிநாட்டுக்குச் செல்லவிருக்கின்றார்; அதற்கு முன்னர் புலிகளின் நிலைப்பாட்டைத் திலகர் மூலமாக அறிவதற்கு அந்த நாடு விரும்புவதாகக் கூறப்படுகின்றது.

புலிகளின் நிலைப்பாட்டை அறிந்த பின்னரே —

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் மூன்றாவது நாட்டின் மத்தியஸ்தம் தொடர்பாக இலங்கை அரசின் கருத்துக் குறித்து அமைச்சர் பீரிஸுடன் பேச அந்த நாடு விரும்புவதாகவும் தெரிகின்றது.

- இவ்வாறு அந்தச் செய்தி வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (உ-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர பரீட்சைக்கான பாடங்கள் மூன்றாகக் குறைக்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 7

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கான பாடங்களை மூன்றாக மட்டுப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த பல ஆண்டுகளாக ஆய்வு நடத்தப்பட்டதாகவும் —

பரீட்சார்த்திகளுக்கு நிவாரணம் வழங்குவதே இதன் நோக்கம் என்றும் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போதுள்ள பாடத் திட்டத்தின்படி ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் 4 பாடங்களை எடுக்கவேண்டும். புதிய யோசனை ஏற்றுக் கொள்ளப்படுமானால் பாடங்கள் மூன்றாகக் குறைக்கப்படும்.

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் பல்கலைக்கழக பிரவேசத்துக்குத் தகுதிகாண் பரீட்சை ஒன்றுக்குத் தோற்ற வேண்டும் என்ற புதிய நடைமுறையும் அமுல்செய்யப்பட உள்ளது.

அத்துடன் உயர்தரப் பரீட்சைப் பாடத் திட்டத்தில் தொழில்நுட்பப் பாடங்களும் சேர்த்துக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## சீனக்குடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தலின் போது விமானப் படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டார். ஆறு பேர் காயம் அடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை —

சீனக்குடா விமானத்தளம் மீதான புலிகளின் தாக்குதலின்போது படையினருக்கு உதவ அனுராதபுரம், ஹிங்குராகொட விமானத் தளங்களில் இருந்து குண்டு வீச்சு விமானங்களும் ஹெலிக்கொப்டர்களும் அனுப்பப்பட்டன.

அப்படி அனுப்பப்பட்ட எம். ஐ. 24 ரக இராணுவ ஹெலிக்கொப்டரே புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகிச் சேதம் அடைந்தது.

இந்த ஹெலியும் விமானத் தளத்தில் வைத்து தகர்க்கப்பட்ட வை -12 ரக இராணுவ போக்குவரத்து விமானமும் புலிகளின் தாக்குதலில் எரிந்து நாசமாகி விட்டதாக வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று நேற்று தகவல் வெளியிட்டது.

விமானத் தளத்துக்கும் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அனுராதபுரம் விமான நிலையத்தில் இருந்து உதவிக்கு அனுப்பப்பட்ட இஸ்ரேல் தயாரிப்பு ''கிபிர்'' குண்டு வீச்சு விமானத்தை நோக்கியும் புலிகள் தாக்குதல் நடத்தினர். எனினும் அந்த விமானம் சேதம் இன்றித் தப்பிவிட்டது.

நேற்றைய தாக்குதலின் பின்னர் படையினர் ரி. எல் எம். ஜி துப்பாக்கி, மூன்று ரி-56 ரக துப்பாக்கிகள், ஒரு ஆர். பி. ஜி லோஞ்சர், தற்கொலைப் படையினரின் இரு உடைகள் ஆகியவற்றைக் கைப்பற்றினர் என்று படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

சீனக்குடா விமானத் தளத்தின் மீதான தாக்குதலின் போது இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சத்தங்கள் திருகோணமலை நகரில் மிகவும் இலேசாகவே கேட்டதாக எமது திருமலைச் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

திருமலை நகரில் இருந்து சீனக்குடா விமானததளம் பல மைல்களுக்கு அப்பால் இருப்பதே இதற்குக் காரணம்.

புதன்கிழமை இரவு முழுவதும் கண்காணிப்பு விமானம் ஒன்று திருகோணமலைப் பகுதியை வட்டமிட்டுக் கொண்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-4-10-150)

## வவுணதீவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

500 முதல் 800 வரையிலான புலிகள் தாக்குதலில் ஈடுபட்டனர் என்றும் அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலின் போது மட்டக்களப்பில் இருந்து மேலதிக படையினர் வருவதைத் தடுப்பதற்காக புலிகள் வவுணதீவு — மட்டக்களப்பு பாதையில் அமைந்துள்ள பெரிய பாலம் ஒன்றைத் தகர்த்தனர்

வவுணதீவு இராணுவ முகாம் தாக்குதல் குறித்து ஏ. எப். பி. செய்தியாளர் பின்வருமாறு தெரிவித்தார்.

தற்போது கிடைத்துள்ள தகவலின் படி இராணுவம் வவுணதீவில் மீண்டும் முகாமை அமைத்துள்ளது. அந்த இராணுவ முகாமுக்கு முன்னால் சோதனை நிலையத்தையும் அமைத்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தற்போது எங்களால் அறிய முடிந்த அளவில் 68 படைவீரர்களும் இரு அதிகாரிகளும் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 100 படையினர் சிறிய மற்றும் பாரிய காயங்களுக்குட் பட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**முதலில் கரும்புலிகள் தாக்கினர்**

முதலில் விடுதலைப்புலிகள் கரும்புலிப் போராளிகளை அனுப்பி முன்னணிக் காவலரண்களைப் பலமுறை தாக்கியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதைத் தொடர்ந்து இரு தரப்பினராலும் பரிமாறப்பட்ட மோட்டார் தாக்குதல்களாலும் ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ஆட்லறிப் பீரங்கித் தாக்குதலின் போதும் வவுணதீவுக்கு அண்மையிலுள்ள கிராமங்களுக்கும், அங்கிருந்த பொதுமக்களுக்கும் பாதிப்புகள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

அப்பகுதியிலிருந்து பக்கச் சார்பற்ற தகவல்கள் எமக்குக் குறைவாகவே கிடைப்பதால் பொதுமக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை அறிய முடியவில்லை.

விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் சுமார் 160 பேர் கொல்லப்பட்டதாக அரசு தெரிவிக்கிறது. ஆனால் அப்பகுதியில் இருந்து இதுவரை எமக்குக் கிடைத்த தகவல்களில் புலிகளுக்கு ஏற்பட்ட இழப்புகள் அரசாங்கம் தெரிவிக்கும் எண்ணிக்கையிலும் பார்க்கக் குறைவு எனத் தெரிவிக்கின்றது.

— இவ்வாறு அவர் கூறினார். (இ-4-10-150)

## மகளிர் தின ஆய்வரங்கு

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை அனைத்துலக மகளிர் தின ஆய்வரங்கு ஒன்றை நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நடத்த உள்ளது.

கைலாசபதி கலையரங்கத்தில் பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸின் தலைமையில் ''தமிழ் மரபில் பெண்மை'' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறும். (இ)

## கருத்தரங்கு

தென்மராட்சி, மார்ச் 7

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரும், சாவகச்சேரி பொலீஸ் நிலைய உத்தியோகத்தர்களும் இணைந்து சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள பாடசாலைகளின் மாணவர்களுக்கு போக்குவரத்து விதிகள் பற்றிய கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர். (ஐ-116)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 7

மகா சிவராத்திரி தினம் இன்றாகும். இதனை ஒட்டி குடாநாட்டில் அனேகமான இந்து ஆலயங்களில் இன்று இரவு விசேட பூசைகளுடன் நான்கு சாமப்பூசையும் பிரார்த்தனைகளும் இடம் பெறவுள்ளன.

நல்லூர் கந்தசுவாமி கோயில், நல்லூர் சிவன் கோயில், கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்மன் கோயில், கொழும்புத்துறை மேற்கு வில்வையம்பதி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ மகாமாரி அம்மன் கோயில், கொழும்புத்துறை ஆத்தியம்பதி ஸ்ரீ சந்திரசேகரர் விநாயகர் கோயில், மணலியம்பதி ஸ்ரீ அம்மன்ஐயனார் கோயில், கொட்டடி சித்தி விநாயகர் கோயில், —

தொல்புரம் கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதிமுத்துமாரி அம்பாள் கோயில், கொழும்புத்துறை வதிரிபீட ஸ்ரீ மன்றுளாடும் விநாயகர் கோயில், பாண்டியன்தாழ்வு ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் கோயில், நெடுந்தீவு கிழக்கு அகலமானப் பிள்ளையார் கோயில் —

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில், புலோலி பசுபதீஸ்வரர் கோயில், நயினாதீவு மதுரை மீனாட்சி அம்மன்கோயில், வண்ணை சாந்தையர்மடம் கற்பகவிநாயகர் கோயில், வட்டுக்கோட்டை கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் கோயில் —

ஆகிய ஆலயங்களிலும் நான்கு சாமப் பூசைகள், அபிஷேகங்களுடன் மகா சிவராத்திரித் திருவிழா நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சில ஆலயங்களில் சமயச் சொற்பொழிவுகள், இன்னிசை நிகழ்ச்சிகளும் ஏற்பாடாகி உள்ளது. (ஐ-30-111-173)

## தாக்குதல் சம்பவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்)

சீனக்குடாப் பகுதியில் படையினர் நடத்திய சுற்றிவளைப்பு, தேடுதல்கள் காரணமாகவே போக்குவரத்துத் தடைப்பட்டதாகவும் —

மதியத்துக்குப் பின்னர் அப்பாதையூடாக மக்கள் நகருக்கு வர அனுமதிக்கப்பட்டதாகவும் —

பிந்திக்கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (உ-150)

# 6 வயதுச் சிறுமியை நரபலி கொடுத்த பெண் கைதானார்!

## உத்தரப்பிரதேசத்தில் சம்பவம்

புதுடில்லி, மார்ச் 7

தனக்குப் பிறக்கும் குழந்தைகள் இறப்பதைத் தடுக்க 6வயதுச் சிறுமியை நரபலி கொடுத்தபெண் ஒருவரைஉத்தரப் பிரதேச பொலீஸார் கைது செய்துள்ளனர்.

உத்தரப் பிரதேசத்தில் உள்ள அபாரி என்ற கிராமத்தில் இச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தப் பெண்ணுக்குப் பிறந்த குழந்தைகள் அடுத்தடுத்து இறந்து போயின. இப்படிக் குழந்தைகள் இறப்பதைத் தடுக்க ஒரு சிறுமியை நரபலி கொடுக்க வேண்டும் என்று கிராமவாசிகள் சிலர் அப் பெண்ணிடம் கூறியுள்ளனர்.

இதை நம்பிய அப் பெண் பூனம் என்ற 6 வயதுச் சிறுமியை நரபலி கொடுத்தாள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அவசரகாலச் சட்டம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 7

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடிக்கும் பிரேரணை நேற்று நாடாளுமன்றில் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது ஆதரவாக 111 வாக்குகளும் எதிராக 87 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியும் சிறீலங்கா முற்போக்கு முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகியவையும் பிரேரணையை எதிர்த்து வாக்களித்தன.

இ. தொ. கா., யாழ் மாவட்ட சுயேட்சைக் குழு ஆகியவை அரசாங்கத்துடன் இணைந்து வாக்களித்தன.

நாடாளுமன்றம் அடுத்த மாதம் 8 ஆம் திகதி மீண்டும் கூடும். (இ-4)

# ரூபவாஹினி பணிப்பாளர் நாயகம் குற்றவாளியாகத் தீர்ப்பு

நுவரேலியாவிலுள்ள உருளைக்கிழங்கு விவசாயிகளிடமிருந்து கமிஷன் பெற்றார் எனக் குற்றஞ்சசாட்டப்பட்டுள்ள ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் டபிள்யு. ஜயசிங்கா அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட 2 ஆவது விசாரணையின் போதும் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார்.

இரு விசாரணைகளிலும் இவர் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளதால் அதற்கான தண்டனையை அரசாங்க சேவை ஆணைக்குழு வழங்கும் என பொதுநிர்வாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவிப்பதாக ''யுக்திய'' சிங்கள வார இதழ் தெரிவிக்கிறது. (இ-10)

# வன்முறைச் சம்பவங்களுக்கு ஆளும் கட்சியினரே காரணம்

## அனுரா குற்றச்சாட்டு

கொழும்பு மார்ச் 7

''உள்ளூராட்சித் தேர்தல் நெருங்க, நெருங்க வன்முறைகளும் அதிகரித்து வருகின்றன.

ஆளும் கட்சியே இந்த வன்முறைகளுக்குக்காரணம்.''

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் இல்லத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் ஐ.தே.கட்சி எம். பியான அனுரா பண்டாரநாயக்கா மேற்கண்டவாறுதெரிவித்தார்.

கம்பஹா மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்களுக்கு ஆளும் கட்சியின் சார்பில் ஜனாதிபதியே நேரடியாகப் பொறுப்பாக இருக்கின்றார். ஆனால் அங்குதான் வன்செயல்கள் தீவிரமடைந்திருக்கின்றன.

தேர்தல் நெருங்க, நெருங்க வன்முறைகளும் எல்லை மீறும் என்ற அச்ச நிலை ஏற்பட்டுள்ளது. — இவ்வாறு அவர் மேலும் கூறினார். (உ-150)

## நேபாள அரசு இராஜினாமா

நேபாள அரசு நேற்று இராஜினாமாச் செய்தது. 18 மாதகாலம் ஆட்சி செய்த கூட்டணி அரசு நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வியடைந்துவிட்டது. நேற்று நாடாளுமன்றத்தில் 6மணித்தியாலங்கள் நடைபெற்ற விவாதத்தின்பின்னர்நேபாள அரசின் இராஜினாமா குறித்து அறிவிக்கப்பட்டது. (இ-10)

## பொன்னாடை

கொழும்புத்துறை, மார்ச் 7

பருத்தித்துறை ஸ்ரீ பண்டாரி அம்மன்கோயிலில் மாசி மக உற்சவத்தை மிகச் சிறப்புற நடத்தி வைத்தவரான ,,கானப்பிரியன்'' பிரம்ம ஸ்ரீ வாசுதேவக் குருக்கள் தங்கப் பதக்கம் சூட்டப்பட்டும், பொன்னாடை போர்த்தப்பட்டும் கௌரவிக்கப்பட்டார். (இ-30)

## பிணையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

தன் உட்பட நால்வரைப் பொலீஸார் கடந்த மாதம் எட்டாம் திகதி கைது செய்தனர்.

தமிழீழ விடுதலை முன்னணியின் செயலாளர் ஈழவேந்தன், உலகத் தமிழர் அமைப்பைச் சேர்ந்தவரும் ஆஸ்திரேலியாவில் இருந்து சென்னை வந்த வருமானதிருமதி இராசநாயகம், பாண்டியன் என அழைக்கப்படும் முரளிதரன் ஆகியோரே ஏனைய மூவருமாவர்.

பாண்டியனை பொலீஸார் கைது செய்ய முனைந்தபோது அவர் 'சயனைட்' வில்லையொன்றைக் கடிக்க முயன்றார். எனினும் பொலீஸார் அவரைத் தடுத்து விட்டனர். (அ-4)

## 43 ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம் மார்ச் 7

யாழ். வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீகற்பக விநாயகர் கோயில் சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் 43 ஆவது ஆண்டு விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் ஆலயமண்டபத்தில் நடைபெறும்.

மேற்படி சைவசமய அபிவிருத்திக் கழகம் ஆண்டு 1 முதல் 5 வரையுள்ளவகுப்பு மட்டங்களில் மாணவர்களிடையே நடத்திய சைவசமய அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்து முதல் மூன்றுஇடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு விழாவின்போது பரிசில்கள் வழங்கப்படும். (அ-4)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07 - 03 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org